விலை ரூபா : 5/-



# இந்து கலாசாரம்

[ இந்து சமய திங்கள் வெளியீடு ]

கௌரவ ஆசிரியர் : திரு. ஆர். வைத்திமாநிதி

லர் : 1 ★ திருவள் வர் ஆண்டு 2019 ஆடித்திங்கள் 31ஆம் நாள் (15.8.88) ★ இதழ் : 2

# "ஒரு கடுமையான இரகசியம்"

மாணவர்கள் பால் மணம் ரு பச்சிளம் பாலர்களாக ந்த போதிலும் தங்கள் கங்களை உன்னதமான ணியில் உணர்ந்து நடித் ார்கள். அதன் மூலம் கூடி ருந்து களித்தவர்களின் பாஷ் கோஷத்தை லேசாகத் ட்டிக் கொண்டார்கள்.

இதனை தயாரித்த மேற்படி ாடசாலை ஆசிரியை ஜனுபா ஏ. கே. ஜபார் குழந்தைகளைப் பயிற்றுவிப்பதில் காட்டியுள்ள அபார திறமையை மெச்சாதிருக்க முடியாது. நடிகர்கள் ஒவ்வொரு வரையும் தங்கள் தங்கள் பாகங்களை உணர்ந்து தத்ரூபமாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் நடிக்க பயில்விப்பது லேசான காரியமல்ல.

குஞ்சலக் குழந்தைகள் மூலம் ஒவ்வொரு நடிகருக்கும் உயிரும் உடலும் கொடுத்து மேடைக்கு அழைத்து வந்தார் ஜனுபா ஏ. கே. ஜபார் என்றால் மிகையாகாது.

இவரின் பாதையிலே மற்றப்பள்ளிகளிலும் நாடகங்கள் தயாரிக்கப்பட்டால் இந்த நாட்டிலுள்ள குழந்தைகள் எல்லாம் தலைசிறந்த கலைஞர்களாக முடியும் என்பதுடன் நாட்டில் ஏதோ ஒரு நாடகம் என்ற நிலைமாறி வீடுதோறும் நாடகம் நாட்டியம் நல்ல கலைகள் அணிசெய்ய ஆரம்பிக்கும்.

**இனி கதையின் சுருக்கத்தைக் கவனிப்போம்.**

ஆதி காலத்தில் யப்பான் தேச கிராமத்திலுள்ள மக்க

(5 ஆம் பக்கம் பார்க்க)




கொள்ளுப்பிட்டி சென்தோமஸ் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் சென்ற 12-13ஆம் திகதிகளில் "ஒரு. கடுமையான இரகசியம்" என்ற நாடகத்தை மேடையேற்றிய போது எடுத்தபடம். (நாடகம் பற்றிய விளக்கத்தை 5ஆம் பக்கம் பார்க்க)

இந்து கலாசாரம்

## சமய பாடம்

இந்து சமய பாடம் சகல பாடசாலைகளிலும் கற்பிக்கப்பட வேண்டுமென்பது கொள்கையாகும். ஆனால் எத்தனை பள்ளிகளில் இது செயல் படுகின்றது? யாருக்குமே தெரியாது

சில பாடசாலைகளில் இந்து சமய பாடமே கற்பிக்கப்படுவதில்லையென்பது பல பெற்றோர்களின் குறைபாடாகும். இந்து சமயம் நன்கு தெரிந்தவர்கள் இல்லாமையும் ஒரு காரணமாகும். சில பாடசாலைகளில் வேறுமதத்தவர்கள் அதிபர் தானத்தில் இருப்பதுவும் ஒரு பிரச்சினையாகும்.

இவற்றுக்கெல்லாம் முடிவு காணப்பட வேண்டுமானால், சகல இந்து சமய அமைப்புகளும் இந்து சமய கலாசார அமைச்சர் திரு. செல்லையா இராஜதுரை அவர்களுக்கு பாடசாலைகளில் நிலவும்சமயப்பாட ஆசிரியர்களின் பற்றாக்குறையையும் சைவசமய பாடப்புத்தகங்களின் இலவச விநியோகத்தின் மந்த நிலையையும் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

மேலும் சைவச் சிறார்களின் சமய வளர்ச்சியை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு சகல அமைப்புகளும் ஞாயிறு சமய வகுப்புகளை கண்டிப்பாக நடத்த வேண்டும். இப்பணிகளில் ஈடுபடுவதற்கான சமய அபிமானிகளின் உதவியைப் பெறலாம்.

இன்று சமய அறிவு இன்மையினாலேயே பல இளைஞர்களும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். இவற்றைத் தடுக்க மதஅறிவு கட்டாயமாகப் போதிக்கப்படவேண்டும்.

# அம்மையே அப்பா ஒப்பு இல்லா மணியே!

இன்றைய இருள் சூழ்ந்த இந்த மாயை உலகில், மனிதர்களாகிய நாம் பல அதர்ம வழிகளில் பலவந்தமாக ஆக்ரமிக்கப்பட்டு, இன்னல்பட்டு, அல்லோலகல்லோலப்பட்டு, அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறோம். அன்றாட வாழ்க்கையை கண்மூடித்தனமாக கடத்திக் கொண்டு இருக்கிறோம்.

இந்த சூழ் நிலையில் நாம் கண்விழித்து கவனமாக, கட்டுப்பாடாக, கடமைகளைச் செய்ய நம்மை தயாரித்துக் கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும்.

இந்து மதம், இனவிரோதத்தையோ சமூக விரோதச் செயல்களையோ தூண்டிவிடும் சமயமல்ல. அது அன்பையும் ஒற்றுமையையும் வளர்க்கும் மதமாகும்.

இந்து சமயத்தில் எத்தனையோ தத்துவங்கள் இருக்கின்றன. இத்தத்துவங்களை நாம் சரியான அணுகுமுறையில் பயன்படுத்துவதில்லை. அதனால் தான் நமக்கெல்லாம் இத்தனை துன்பங்களும் அழிவுகளும் ஏற்பட்டு வருகின்றன.


நாம் சகலதையும் அறிய வேண்டுமானால் மதபோதனையைப் பெறவேண்டும். சிறார்களுக்கும், சிறுவயது முதலே சைவசமய போதனை சகல பாடசாலைகளிலும் ஏற்படுத்த இந்து கலாசார அமைச்சு தகுந்த நடைவடிக்கை எடுக்க வேண்டுமென விரும்புகின்றோம்.

இதுமிகவும் சாதாரணமான ஒரு காரியம், நாம் உலகத்தில் எந்த கோடிக் கரையில் இருந்தாலும் செயற்படுத்தக்கூடிய ஒரு வழியாகும். மனதில்உண்மையாகப்பிடிப்போடும்செயல்படுத்தவேண்டும். அதாவது தினமும் நமது பெற்றோரை முதற் கண் மனதால் வணங்கிக்கொள்ளவேண்டும். மேலும் அவர்களுக்கு நம்மால் முடிந்த மட்டும் அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். வயோதிப காலத்தில் தளர்ந்து கொண்டு இருக்கும். பெற்றோரை கூடுமான வரை மனத்திருப்தியோடும், சந்தோஷத்தோடும இருக்க நம்மால் முடிந்த எல்லா வழி முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். இந்த சிறு காரியங்களை சரிவர செய்து வந்தால் நிச்சயமாக நமது அன்றாட வாழ்க்கை எந்த வித இடைஞ்சலும் இல்லாமல் நிம்மதியாக இருக்கும், இது நிச்சயம் பெற்றோர் மனம் திருப்திப்பட்டால், சந்தோஷப்பட்டால், சாந்தப்பட்டால் ஒருவனுக்கு என்றுமே ஒருகுறையும் வராது. ஆயிரம் கோவில்களில் அங்கப் பிரதட்சணம் செய்த புண்ணிய பலன் நிச்சயமாகக் கிடைக்கும். இதுவே எல்லாம்வல்ல இறைவனுக்கு நாம் செலுத்தும் முதல் மரியாதையாகும்.

இந்த இந்து தர்மத்தை, இந்து கலாசாரத்தை பாரம்பரியமாக பலர் பலவிதமாக கூறிவந்து இருக்கின்றார்கள். நாமும் இங்கு இறைவன் பாதாரங்களை வணங்கி பெற்றோரைப் பேணும் தூய நெறியை மனதில் கொண்டு எமது வாழ்க்கையை வளப்படுத்துவோமாக.

'அகரமுதல எழுத்து எல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'.

[ திரு. ஆர். வைத்திமாநிதி ]



கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றம் நடத்திய கலைமகள் விழாவில் மன்ற முன்னாள் தலைவர் திரு. ஏ.எம் துரைசாமி பேசுவதைக் காண்க.

# இந்து கலாசார மன்றமும்

# மெதடிஸ்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும்

"கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றமும் மெதடிஸ்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும்" என்ற தலைப்பில் 15. 7. 88 நமது இந்து கலாசார இதழில் ஒரு சிறு குறிப்பு வெளியிட்டிருந்தோம்.

"கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அபிவிருத்திக்கு இந்து கலாசார மன்றம் செய்துள்ள சேவைகள் சாதாரணமானவை அல்ல. "பாடசாலை நலம் விரும்பிகள்" என ஒரு குழு அமைத்து பாடசாலைபெற்றோர் ஆசிரியர் சங்கத்துடன் பூரணமாக ஒத்துழைத்து வந்தோம். மன்ற உறுப்பினர்களில் ஐவர் பாடசாலை அபிவிருத்தி சங்கத்திலும் அங்கத்தவர்களாய் இருந்து சேவை செய்து வந்தோம். அப்படி இருந்தும் நாம் ஏமாற்றப்பட்டு வெளியேற்றப்பட்டோம். இதன் முழு விவரங்களையும் அடுத்து வரும் இந்து கலாசார இதழ்களில் தொடர்ந்து எழுதி வருவோம்."

இந்த குறிப்பை கண்ணுற்ற நமது வாசக நேயர்களில் பலரும் கொள்ளுப்பிட்டி வாழ் இந்துப் பெரு மக்கள் பலரும் கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அபிவிருத்திக்கு இந்து கலாசார மன்றம் செய்துள்ள சேவை என்ன? இந்து கலாசார மன்றம் வெளியேற்றப்பட வேண்டிய காரணம் என்ன? என்பதை விளக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

நமது விளக்கத்தை அளிக்கு முன்னர் மேற்படி பாடசாலையின் அபிவிருத்திக்கும் பாடசாலையில் இந்து கலாசார மன்றம் மேற்கொண்ட இந்து சமய, கலை, கலாசார நடவடிக்கைகளுக்கெல்லாம் பாடசாலை அதிபரின் அனுமதியைப் பெற்றே நடத்தி வந்தோம். பாடசாலை அதிபரே நமது சேவையைப் பாராட்டி அப்போது நமக்கு எழுதிய கடிதத்தின் நகலை பிறிதோரிடத்தில் காணலாம்.

"என் நன்றி கொன்டார்க்கும் உய்வுண்டாம். உய்வில்லை செய்நன்றி கொன்டமகற்கு" என்பதை வேத வாக்காகக் கொண்ட நாம் மேற்படி பாடசாலை அதிபருக்கும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தாருக்கும் என்றும் நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம். எமது முயற்சியால் பாடசாலை உயர்ச்சி பெற்றதை எவரும் மறுக்கமுடியாது. இதன் முழு விவரங்களையும் பொதுமக்களுக்கு அறியத் தருகிறோம்.

இந்து கலாசார மன்றத்தின் இந்து சமய கலை கலாசார நடவடிக்கைகளுக்கு பாடசாலையில் இடம் கிடைப்பதை காரணமாகக் கொண்டும், இப்பகுதியிலுள்ள ஏழை தமிழ்ப் பிள்ளைகளுக்கு இப்பாடசாலை பெரிதும் பயன்படுவதால் இப்பாடசாலை அபிவிருத்தியில் நாம் பெரிதும் அக்கறை கொண்டிருந்தோம் இன்றும் அக்கறையோடுதான் இருக்கிறோம்.

பாடசாலை அபிவிருத்திக்கென்று பாடசாலை அதிபர் எங்களுக்கு என்ன வேண்டுகோள் விடுத்தாலும் நாம் யாதொரு மறுப்புமின்றி நிறைவேற்றிவந்துள்ளோம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



C/Kollupitiya Methodist Govt. Tamil Mixed School

No 59, HUDSON ROAD, COLOMBO 3

INTER-HOUSE ATHLETIC SPORTS MEET.

ORGANISED BY HINDU CULTURAL SOCIETY KOLLUPITIYA.

24. 03. 1983

CERTIFICATE OF AWARD

Event ______ Master/Miss ______

was placed ______ ______ House

C. E. O. Colombo Tamil South — President Hindu Cultural Society — Principal

கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றம் 1983 ஆம் ஆண்டு இல்ல விளையாட்டுப் போட்டியை ஒழுங்கு செய்து கொடுத்தபோது விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு வழங்கப்பட்ட சான்றிதழின் நகல்.

## சிறுவர் பகுதி

அன்புத் தம்பி தங்கைகளே!

சாயி இயக்கத்தில் பால விகாஷ் கல்வி அமைப்பு முறை மிக முக்கியமானது. உண்மையான கல்வியென்றால் ஒரு தம்பி தங்கையிடமிருந்து தன்னலத்தை அகலச் செய்ய வேண்டும். கல்வி உத்தியோகம் பெறுவதற்கு மாத்திரம் அமையக்கூடாது. அன்பும் ஆனந்தமும் தழைத்தோங்க வேண்டும். தன்னிலும் குறைந்த பரிதாபத்துக்குரிய நிலையில் உள்ளவர்களிடம் அன்புகொள்ள வேண்டும், அவர்களுக்கு கூடிய அளவு சேவை செய்ய வேண்டும். இதுவே பகவானின் விருப்பம்.

அருமைத் தம்பி தங்கைகளே! இப்பகுதி உங்கள் பகுதி. உங்கள் எழுத்தோவியங்களை அனுப்புங்கள். தகுதியானவற்றை பிரசுரிப்போம்.

உங்கள் அன்பு அக்கா
அமரா

# பாலவிகாஷ் கல்வி அமைப்பு

சாயி இயக்கத்தில் பால விகாஷ் அமைப்பு மிகமுக்கியமானது. 50 வயதுக்கு மேற்பட்டவர்களில் பகவானுக்கு அக்கறையேயில்லை. ஏனெனில் அவர்களைத் திருத்தவோ, மாற்றி அமைப்பதோ மிகக் கடினம். ஆதலின் கல்வி போதிக்கும் முறையை பகவானே அமைத்து, இளம் வயதிலேயே மனித சிலங்களைப் போதிக்கவேண்டும். கல்வியின் அடிப்படை நோக்கம் நாட்டின் நலனுக்கு உழைப்போராகவும், நல்லொழுக்கம் உடையோராய் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுப்பதாய் அமைய வேண்டும். இதனை இலக்காகக் கொண்டு பாலவிகாஷ் மாணவருக்கான விசேஷபாடத் திட்டத்தை அருளி இருக்கின்றார். மாணவரை இரு பிரிவாகப் பிரித்து, அதாவது 6-9 வயதுடைய வரை ஒரு பிரிவாகவும், 10-12 வயதுடையவரை இன்னொரு பிரிவாகவும் வகுத்துள்ளார்கள். இரு பிரிவினருக்கும் புறம்பான பாடத்திட்டங்களையும் அமைத்துள்ளார்கள்.

சத்தியம், தர்மம், சாந்தி பிரேமை, அகிம்சை ஆகிய உன்னத இலட்சியங்களை அடைவதற்கு இத்தகைய போதனாமுறையை ஏற்படுத்தி அதனூடு பல இடங்களில் கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் அமைத்துள்ளார்கள். பிரசாந்தி நிலையம், பம்பாய், ஆனந்தப்பூர் போன்ற இடங்களிலும் பெரிய கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்தகைய கல்லூரிகளில் வெறும் பி.ஏ, எம்.ஏ.க்களை உற்பத்தி செய்யாமல், மனித சிலங்களின் பயிற்சி உடையோராய், பண்பாளராய் மக்களுக்குச் சேவை செய்வோராய் உருவாக்கி உள்ளார்கள்.

**( பொன். கனகராஜா )**

கல்விமான்களாலும், அரசியல் மேதைகளாலும் பாராட்டுகளைப் பெற்ற இக்கல்வித் திட்டத்தை மாநில அரசாங்கங்களே தமது கல்வி அமைப்புக்களில் சேர்த்துக்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளன. இதனை பகவான் அவர்கள், ''உண்மையான கல்வியென்றால் தன்னலத்தை ஒரு மாணவனிடமிருந்து அகலச்செய்ய வேண்டும். அக்கல்வி உத்தியோகம் பெறுவதற்கு மாத்திரம் அமையக் கூடாது''. அன்பும், ஆனந்தமும் தழைத்தோங்க வேண்டும். ஆனால் இன்றைய கல்விமுறையோ பொறாமைத்தீயை மேலும் வளரச் செய்கின்றது. மனிதனின் தெய்வீகத்தன்மை தவிடுபொடியாகின்றது.

உண்மையில் கல்வி ஒருவனுக்கு தன்னம்பிக்கையை ஊட்டவேண்டும். தனித்து நிற்கவேண்டிய பலத்தைக் கொடுக்கவேண்டும். தன்னிலும் குறைந்த, பரிதாபத்துக்குரிய நிலையில் உள்ளவர்களில் அன்பு கொள்ள வேண்டும். அவர்களுக்குக் கூடிய அளவு சேவை செய்யவேண்டும். இன்னும் ''கல்வியின் இறுதி முடிவு ஒழுக்கசீலமாகும். நல்லொழுக்கம் இல்லாதவர் கல்விமானாகக் கருதப்படமாட்டார். பகவானுடைய கல்வி அமைப்பில் ஒழுக்கசீலத்தை முதலாகக் கொண்டே பல கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன. பல

(15 ஆம் பக்கம் பார்க்க)



கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்ற சைவசமய ஞாயிறு வகுப்பு மாணவ மாணவியரையும் ஆசிரியர்களையும் படத்தில் காண்க.

## ஒழுக்கம்

— நாரா. நாச்சியப்பன்

ஒழுக்கம் உயர்வை உண்டாக்கும்
உண்மைப் புகழை உண்டாக்கும்
முழுக்க முழுக்கப் பாராட்டும்
மூத்தோர் நட்பை உண்டாக்கும்.

நம்பிக் கையை உண்டாக்கும்
நன்மை யாவும் உண்டாக்கும்
துன்பம் தன்னை உடன்போக்கும்
தூயோர் உறவை உண்டாக்கும்.

அறிவு மிக்கோர் பெயரோங்கும்
ஆற்றல் மிக்கோர் செயலோங்கும்
உறவு கொண்டோர் வாழ் வோங்கும்
ஒழுக்கங் கொண்டோர் சிறப்போங்கும்.

ஆசிரியருக்குக் கடிதம்

# பாராட்டுகிறேன்

ஆசிரியர்
இந்துகலாசாரம்
கொழும்பு

அன்புள்ள ஐயா,

15-7-88 இந்து கலர்சார இதழில் ''கொள்ளுப்பிட்டியில் சைவ சமய வளர்ச்சிக்கு வித்திட்ட அருட் பெருந்தகை சிவநேயச் செல்வர் அமரர் திரு. கே. பீ. பரமசிவத்தின் வாழ்க்கை வரலாறு'' என்னும் தலைப்பில் வெளிவந்துள்ள கட்டுரையைப் படித்தேன் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இக்கட்டுரை மிகவும் பயனுள்ளதாகும்.

சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் கொள்ளுப்பிட்டியில் சைவ சமய வளர்ச்சிக்கு வித்திட்ட ஒரு பெரியாரைப்பற்றி நான் கேள்விப் பட்டதில்லை. நான் மாத்திரமல்ல என் போன்ற இளைஞர்கள் பலருக்கும் தெரியவராது. ''கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்ற போக்குடைய இக்கால இளைஞர்கள் சமயத்துக்கும், சமூதாயத்துக்கும் அரும் பெரும் தொண்டு செய்த பெரியார்களைப் பற்றி தெரிந்து சொன்ன அன்பர் அ.மு.து எடுத்த முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றேன். அவருக்கு என் நன்றி.

அமரர் கே. பீ. பரமசிவம் ஐயா மாத்திரமல்ல இன்னும் எத்தனையோ பெரியார்கள் கொள்ளுப்பிட்டியில் வாழ்ந்திருக்கிறார்கள் என்று சில பெரியார்கள் சொல்லக் கேள்விப் பட்டிருக்கின்றேன்.

1919 ஆம் ஆண்டிலே ''தென் இந்தியர் சங்கம்'' என்ற ஒரு சங்கத்தை அமைத்து ''திராவிடன்'' என்ற ஒரு தமிழ் மாதப் பத்திரிகையையும் கொள்ளுப்பிட்டியில் இருந்தே வெளிவிட்டிருக்கின்றனர். அன்பர் அ. மு. து. விரும்பினால் என்னிடமுள்ள பழைய திராவிடன் பத்திரிகை பிரதிகளையும் அக்காலத்தில் வெளிவந்துள்ள சில பிரசுரங்களையும் கொடுத்துதவ தயாரர்க இருக்கின்றேன்.

தமிழ் பெரியார்கள் மாத்திரமல்ல; முஸ்லிம் பெரியார்கள், சிங்களப் பெரியார்கள் வாழ்ந்திருக்கின்றனர். இவர்களில் பெரிய பரோபகாரியான எக்ஸத் சுபசாதக சமித்தியை ஸ்தாபித்த சிங்களப் பெரியார் அமரர் பாலசூரியா, அமரர் ரணசிங்க, திராவிடன் பத்திராதிபர் அமரர் எஸ். பி. கோபாலசாமி, அமரர் எஸ். ஆர். முத்தையா, அமரர் டைடஸ் பி. கனகசபை, அமரர் ஏ. எஸ். ஜான், அமரர் லோறி முத்துகிருஷ்ணா, அமரர் டாக்டர் எம். ஜே. அப்பாசாமி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களைப்பற்றி எல்லாம் இக்கால இளைஞர்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும்.

இவர்களைப்பற்றிய வரலாறுகளை வெளியிடுவது கொள்ளுப்பிட்டிக்கே பெருமை தருவதாகும்.

வணக்கம்
அன்புள்ள
ஆர். நாகராஜன்,
கொள்ளுப்பிட்டி.

ஒரு கடுமையான......
(1ம் பக்கத்தொடர்)

ளுக்கு முகம் பார்க்கும் கண்ணாடி என்னவென்று தெரியாத நிலையில்இருக்கும்போது நடந்த ஒரு கதையாகும். இதில் ஒரு கிராமத்தில் கிக்கு என்பவன் லில்லி என்ற பெண்மணியை மணமுடித்து சந்தோஷமாக வாழ்ந்து வந்தான். கிக்கு ஒரு கமக்காரன் அவன் ஒரு நாள் வயலுக்குச் சென்று வேலையை முடித்துக் கொண்டு திரும்பும் வழியில் ஒரு மினுமினுக்கும் பொருளைக் கண்டெடுத்தான். அதை உற்று நோக்கியதும் அதில் ஒரு உருவம் தென்படுவதைக் கண்டான். வியப்படைந்தான். தன் இறந்த தகப்பனின் உருவமாகயிருக்கலாம் என்று நினைத்தான். ஆகையால் இதற்குத் தகுந்த மரியாதை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தனது சட்டைப் பையுள் வைத்துக்கொண்டிருந்தான். இதை நேரத்துக்கு நேரம் எடுப்பதும் பார்ப்பதும், ஒழிப்பதும் அவ்வுருவத்துடன் பேசுவதுமாகயிருந்தான்.

இதை அவதானித்த தன் மனைவி லில்லி தனது கணவனுக்கு பைத்தியம் பிடித்து விட்டதோ என நினைத்து அக்கண்ணாடியைப்பறித்துதானும் உற்று நோக்கினாள். அவள் விழிப்படைந்தாள்! கதறினாள்! இக்கண்ணாடியில் வடிவில்லாத ஒரு பெண்மணியின் முகம் தென்பட்டது. உடனே அவள் கிக்குவைச் சந்தேகித்தாள். இப்பெண்ணைத் தன் கணவன் நேசிக்கிறான் என்ற நோக்கத்துடன், தனது கணவனோடு தொடர்ந்து சண்டையிட்டாள். வீட்டில் அமைதியின்மை நிலவியது. ஒரு நாள் இப்படிச் சண்டை நடந்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு மத குரு அவ்வழியே சென்றுக்கொண்டிருந்தார். குழப்பம் நடந்து கொண்டிருக்கும் இடத்துக்குச் சென்று வினவினார். குழப்பத்தின் காரணத்தையும் அறிந்தார். உடனே அக்கண்ணாடி எங்கே என்று கேட்டு, தானும் அதை உற்று நோக்கினார். வியப்படைந்தார். கிக்குவையும், லில்லியையும் பார்த்து ''இவ்வுருவத்தை இருவரும் பிழையாகக் கருதுகிறீர்கள்.'' கிக்கு கூறுவது போல், இக்கண்ணாடியில் கிக்குவின் தகப்பனின் உருவம் தெரியவில்லை. லில்லி சொல்வது போல் ஒரு பெண்ணின் உருவமும் தெரியவில்லை இக்கண்ணாடியில் மதகுருவின் உருவம் தான் தெரிகிறது. ஆகையால் நீங்கள் இருவரும் சண்டையை நிறுத்தி சந்தோஷமாக வாழுங்கள்என்று கூறி, அக்கண்ணாடியைக்கோயிலில் வைப்பதற்கு எடுத்துச் செல்கின்றார்.



கொள்ளுப்பிட்டி ஸ்ரீ சத்ய சாயிபாபா பஜன் மண்டலியினர் நடத்திய சாயி பஜனையில் கலந்துகொண்ட சாயி பக்தர்கள்.

## பணுவத்தை சுப்பையா காலமானார்



அமரர் எம். வி. சுப்பையா

பணுவத்தை திரு. எம். வி. சுப்பையா அவர்கள் 15-8-88 திங்கட்கிழமை காலை தனது 71 வது வயதில் கொழும்பில் காலமானார் என்பதை அறிந்து நாம் ஆழ்ந்துயரமடைகிறோம்.

பணுவத்தை சுப்பையா என்றால் மலையகத்திலும் குறிப்பாக களனிவேலி பிரதேசமான எட்டியாந்தோட்டையிலும் அவரை அறியாதவர்கள் இருக்கமுடியாது.

எட்டியாந் தோட்டை பணுவத்தை தோட்டத்தில் சுமார் 30 வருடங்களுக்குமேல் பிரதம குமாஸ்தாவாக இருந்து ஓய்வு பெற்று கொள்ளுப்பிட்டியில் வந்து வசித்த கால முதல் நமது இந்துகலாசார மன்றத்தில் அவரும் அவரது தர்ம பத்தினியார் திருமதி பத்மாவதி சுப்பையா அவரது திருமகளார் திருமதி சுபாஷிணி சுதந்திரராஜன் (இவர் கொள்ளுப்பிட்டி ஸ்ரீசத்யசாயிபாபா பஜன் மண்டலியின் செயலாளருமாவார்) மற்றும் அவரது குடும்பத்தினர்கள் மிகவும் ஈடுபாடு கொண்டு உழைத்து வந்தவர்கள்.

பணுவத்தை தோட்டத்தில் நகரப்புறங்களிலுள்ள பெரிய ஆலயங்களைப் போல் பெரிய ஆலயமொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாலயம் அமைப்பதற்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்களில் அமரர் சுப்பையா முதன்மையானவர். இவ்வாலயத்தில் ஆறு கால பூசைகளும் நியமப்படி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

1939 ஆம் ஆண்டு பண்டிட் நேரு இலங்கை வந்து இலங்கை இந்திய காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்ட போது காங்கிரஸின் தொழிற்சங்கத்து அமரர் சுப்பையா பல வருடங்கள் செயலாளராக இருந்து பணியாற்றினார்.

மலையக மக்களின் நல்வாழ்வுக்காக அவரும் அவரது குடும்பத்தினரும் செய்துள்ள சேவைகள் என்றும் நினைவு கூரத்தக்கதாகும்.

அமரர் திரு. சுப்பையா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது தர்மபத்தினியார் திருமதி பத்மாவதி சுப்பையா திருமகளார், திருமதி சுபாஷிணி சுதந்திரராஜன் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# ஆவணி விசேஷம்

பிரம்மஸ்ரீ குஹானந்த சர்மா

ஆவணி 09- 1988-08-25 வியாழக்கிழமை பிரதோஷ விரதம்- சிவ விரதத்தை அனுஷ்டிக்கும் அடியார்கள் சிவாலயங்களில் பிரதோஷ கால அபிஷேகம், பூஜை, உற்சவம் என்பன நடைபெறும். வழிபாடுகள் செய்த பின் தமது விரதத்தை நிறைவு செய்வர்.

ஆவணி - 10 1988-08-26 வெள்ளிக்கிழமை

(அ) ஆவணி ஓணம் ஓணம் பண்டிகை விமர்சையாகக் கொண்டாடப்படும். விஷ்ணு ஆலயங்களில் அபிஷேகம், பூஜை, உற்சவம் என்பன உண்டு.

(ஆ) ஸ்ரீ நடேசர் அபிஷேகம் ஸ்ரீ நடராஜப் பெருமானின அபிஷேக நாள் சிவாலயங்களிலும், ஸ்ரீ நடராஜர் ஆலயங்களிலும் விசேஷ அபிஷேகம், பூஜை, உற்சவம் என்பன நடைபெறும்.

(இ) வராக ஜெயந்தி:- வராகமூர்த்தியின் ஜனனத்தை யொட்டிய விழாக்கள் உண்டு.

(ஈ) ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம் இல்லங்களில் சுமங்கலிப் பிரார்த்தனைகள் நடைபெறும்.

(உ) இருக்கு வேதஉபாகர்மம் இருக்கு வேத பிராம்மணிகள் ஜபம் தர்ப்பணம், பூணூல் மாற்றல், ஹோமம் என்பனவற்றை விரத அனுஷ்டானங்களுடன் மேற்கொள்வர்.

ஆவணி – 11 -1988-08-27

(அ) பூரணை விரதம்

(1). அம்பாளுக்கு அபிஷேகம், பூஜை, ஸ்ரீ சக்ர பூஜை உற்சவம் என்பன நடைபெறும்.

(2). தாயை இழந்தவர்கள் தாயாருக்காக விரதம்இருந்து பிதுர்க்கடன்களை நிறைவேற்றுவர்.

(ஆ) யஜுர் வேத உபாகர்மம் யஜுர் வேதிகள் விரத அனுட்டானங்களுடன் ஜபம் தர்ப்பணம், பூணூல் மாற்றல் ஹோமம் என்பனவற்றை மேற்கொள்வர்.

ஆவணி 14- 1988-08-30 செவ்வாய்க்கிழமை

சங்கடஹர கணபதி விரதம்

கணபதி அடியார்களுக்கான நாள்.

ஆவணி -17 1988-09-02 வெள்ளிக்கிழமை.

கார்த்திகை விரதம் கார்த்திகை விரத அனுஷ்டானகாரர்கள் முருகன் ஆலயங்களில் நடைபெறும் அபிஷேகம், பூஜை, உற்சவம் என்பனவற்றில் பங்குகொண்டு தமது விரதங்களை நிறைவேற்றுவர்.

ஆவணி 21– 1988-09-06 செவ்வாய்க்கிழமை

ஏகாதசி விரதம்-விஷ்ணு ஆலயங்களில் நடைபெறும் அபிஷேகம், பூஜை, உற்சவம் என்பனவற்றில் விரதகாரர்கள் பங்குபற்றித் தமது விரதனுஷ்டானங்களை நிறைவேற்றுவர்.

ஆவணி 23- 1988-09-08 வியாழக்கிழமை

பிரதோஷ விரதம் பிரதோஷ விரதத்தை மேற்கொள்வோர். விரதமிருந்து பிரதோஷ காலப் பூஜையைத்

(11ஆம் பக்கம் பார்க்க)

# சைவாலய பூஜையில் தமிழ் வேதம்

-பண்டிதர் மு. கந்தையா பீ. ஏ.

சைவாலய பூஜையின் பொது அம்சங்கள் அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம்; தௌர்யத்ரிகம் (திருத்தகீத வாத்தியங்கள்) என்பன. பூஜையின் முழுமையைப் பேணுவதில் இந்த ஏழு அம்சங்களுக்கும் ஒரேமாதிரியான முக்கியத்துவமுண்டு. இவற்றில் தோத்திரம் என்ற அம்சத்தில் பதிவாக்கு என்ற மகிமைக்குரிய தோத்திரங்கள் யாவும் இடம்பெற வேண்டியவை. இவ்வகையில் வேதம், ஆகமம், சைவத்திருமுறைகள் என்ற மூன்றும் பிரதானமானவை. தன் சிவபாவனை அழுத்தத்தினாலே தான் சிவனாகவே நின்று கொண்டு சிவனருளை வேண்டிப்பூஜை அம்சங்கள் ஒவ்வொன்றினையும் நிறைவேற்றும் பூஜகர், எவ்வாறு ''வேதம் அவதாரய'' என்று வேண்டிக்கொண்டு வேதத்திலுள்ள துதியையும், ''ஆகமம் அவதாரய'' என்று வேண்டிக் கொண்டு ஆகமத்திலுள்ள துதியையும் கூறக் கடமைப்பட்டுள்ளாரோ அவ்வாறே ''தேவாரம் அவதாரய'' ''திருவாசகம் அவதாரய'' என்று இவ்வகையில் வேண்டிக்கொண்டு திருமுறைகளையும் ஓதக் கடமைப்பட்டுள்ளார். அவரே சங்கற்பித்துக்கொண்டு பூசை செய்ய முன்னிற்கின்றமையால் அது அவரே செய்தற்குரியது. சிலவேளை தமக்கு ஓதும் திறமை போதாதென்ற காரணத்தால் பூஜகரொருவர் அத்திறமையுள்ள மற்றொருவர் மூலம் அதைச் செய்விக்க வேண்டியிருப்பின் தம் தியான வன்மையால் அவரையும் சிவபாவனையில் நிற்பவராகப் பாவித்து அவருக்கு விபூதி வழங்குதல் மூலம் தமது செயலுரிமையை அவர்க்கேற்றி அவர் அதை நிறைவேற்றும் வரை தாமும் அச்செயற் பாவனையில் வழுவாது தியானத்தில் ஒடுங்கி நின்று தாமே தம் கையால் இத்தோத்திர பூஜையைச் சுவாமிக்கு ஒப்புக்கொடுத்து தீபாராதனை செய்யவேண்டியவராகின்றார். இது பூஜை இலட்சணத்திற்கு ஒத்த நியதியாகும்.

இந்நியதியானது இன்றைய நமது ஆலய பூஜை வைபவங்களிற் பெரிதும் பின்னமடைந்திருக்கிறது. பதிவாக்காகிய தோத்திரம் என்ற வகையில் எழுதாமறையாகிய வேதத்துக்கும், எழுதுமறையாகிய திருமுறைக்குமிடையிலுள்ள அந்தரங்கத் தொடர்பு ஆசீர்வாதம் என்ற மற்றொன்றினால் பேதிக்கப் பட்டுப் போய்விடுகிறது. பூஜா மந்திரமும், பூஜைத் துதியுமாய் தனித்தனி அமையவல்ல வேதத்திற்கும் திருமுறைக்குமிடையே இவ்விரண்டில் ஒன்றுமாகாத ஆசீர்வாதம் புது வரத்தாகப் புகுந்துகொண்ட புதுமைதான் என்னையோ! ஆசீர்வாதம் என்பது பூஜையில் சேர்ந்துள்ள குறைகள் நிறைவுறவும் குறித்த பூஜை பலனால் பொதுவாக உலகுயிர்களும் சிறப்பாக பூஜையில் சம்பந்தப்பட்ட எஜமான் முதலியோரும் இகபரப் பேறுகளைப்பெறவும் மஹான்கள் அனுக்கிரகிக்க வேண்டும் என்ற ஒரு விருப்ப வெளியீடாகும் அது பூஜையம்சங்கள் சகலமும் பூர்த்தியான பின் நிசழ்தற்குரியது. பூஜை முடிந்த பிறகு குறை நிறைகளுக்கு அமைதி கேட்பதுதானே பொருத்தம் குறையை வைத்துக்கொண்டு குறை நிறைகளுக்கு அமைதி கேட்பது எப்படி? அவ்வகையிற் பார்த்தால் பூஜையொன்றில் ஆசீர்வாதம் செய்யப்பட்டு விட்டதெனில் பூஜை முடிந்தாய் விட்டதென்ற நிலையையே தெரிவிப்பதாகும். அதன்மேல் ''தேவாரம் அவதாரய'' என்று திருமுறை ஓதுவிக்கப் பெறுமாகில் அப்பூஜையில் தோத்திர பூஜையம்சம் சிறங்கணிக்கப்பட்டு அவ்வகையால் திருமுறை புறக்கணிக்கப்பட்டதென்பதே அர்த்தமாகும். சிவபெருமானால் சிவமெய்ஞ்ஞானிகளைக் கொண்டு முன்னின்று பாடுவிக்கப்பெற்ற திருமுறைகள், சிவன்வாக்கே தம்வாக்காக வருவதாக அவர்கள் கூறும் அத்தாட்சியோடு கூடிய திருமுறைகள் வேதப்பொருளையே கூறுவனவாக ஆன்றோரால் அறுதியிட்டு வைக்கப்பட்ட திருமுறைகள், தமிழ் நாட்டிலே தனித்துவக்கலையாகச் சிவகலையையுஞ் சைவக்கலையையும் ததும்ப வைத்த திருமுறைகள் பல்வேறு தெய்வாதிசயங்களை நிகழ்வித்த திருமுறைகள், மந்திர மகராசனாகிய பஞ்சாக்ஷரமே ஞானமும் மெய்நெறியும் என்ற மகிமையைப் பாருலகறியப் பரப்பி வைத்த திருமுறைகள் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுதற்கான எளிமையும் இனிமையும் படைத்த திருமுறைகள், சிவாலய பூஜையில் அங்ஙனம் புறக்கணிக்கப்படுதல் சைவத்துக்கு அழகே அல்ல!

(9 ஆம் பக்கம் பார்க்க)

---

## உகந்தது ..

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் சிவாலயத்தில் வெந்த நீறும் திருமால் கோவிலில் குளிர்ந்த நீரும் தருவார்கள்.

சூட்டைத் தணிப்பது வில்வம். குளிர்ச்சியைத் தணிப்பது துளசி.

இதனால் சிவாலயத்தில் வில்வார்ச்சனையும் திருமால் கோவிலில் துளசி அர்ச்சனையும் நடைபெறுகின்றன.

- வாரியார்

## பஞ்ச பூதத்தலங்கள்!

1 - பிருதுவி (நிலம் - மண்) திருவாசகர்
2 - அப்பு (நீர்) திருஆனைக்கா
3 - தேயு திருவண்ணாமலை
4 - வாயு (காற்று) திருக்காளத்தி
5 - ஆகாயம் ([illegible] ஏம்) தில்லை

# பகவான் கூறிய கதை

உயர்ந்த பல தத்துவங்களையும் கருத்துக்களையும் பாப்பாக்களுக்கு இலகுவில் விளங்குவதற்காக பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா அவர்கள் பல கதைகள் கூறியிருக்கிறார். "பக்தர்களைக் காப்பாற்ற பகவான் எந்த ரூபமும் தரிப்பார்" என்ற கருத்தை விளக்க பகவான் கூறிய கதை இது.

ஒரு காலத்திலே உதயபுரம் என்ற ஊரில் தேவேசர் என்ற வயோதிபர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர், அந்நாட்டு மன்னனின் மதிப்புக்குரிய பாலகிருஷ்ணன் கோவிலே அர்ச்சகராக இருந்தார்.

தினசரி இரவுப் பூசை முடிந்ததும், பாலகிருஷ்ணனுக்கு சூட்டப்படும் பூமாலையை எடுத்து தனது தலையிலே சுற்றிக் கொண்டு தனது வீட்டுக்குப் போவது வழக்கமாகும்.

ஒருநாள் இரவு பூசை முடிந்ததும், வழக்கம் போல பாலகிருஷ்ணனின் தலையில் சுற்றப்பட்டிருந்த பூமாலையை எடுத்துத் தனது தலையிலே சுற்றிக்கொண்டு ஆலயக் கதவை பூட்ட முயற்சித்தார்.

அப்போது ......!

பாலகிருஷ்ணனைத் தரிசிப்பதற்கு அரசர் வந்து கொண்டிருந்தார். அர்ச்சகர் ஓடிச் சென்று அரசரை வரவேற்றார். தீபாராதனை நடைபெற்று முடிந்ததும், அரசருக்கு விபூதிப் பிரசாதம் வழங்கினார் அர்ச்சகர். பாலகிருஷ்ணனுக்கு சூட்டப்பட்ட மாலை தனக்கு வேண்டும் என்று மன்னர் கேட்டார்.

அரசரின் வேண்டுகோளைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்தார் அர்ச்சகர். பாலகிருஷ்ணன் சிலையில் மாலையே கிடையாது. சூடப்பட்டிருந்த ஒரே மாலை அர்ச்சகருடைய தலையிலே சுற்றப்பட்டிருந்தது.

படபடப்புடன் ஆலயத்துக்குள் ஓடினார் அர்ச்சகர்; தனது தலையிலே சுற்றப்பட்டிருந்த பூமாலையை எடுத்து ஒரு தட்டிலே வைத்து அரசரிடம் கொண்டு சென்றார்.

அரசர் அந்தப் பூமாலையை எடுத்து கண்ணிலே ஒற்றிக் கொண்டார். அடுத்த நிமிடம் திடுக்குற்றார் அரசர். அவருடைய கண்கள் கொவ்வைப் பழம்போலச் சிவந்தன. அந்தப் பூமாலையில் நரைமயிர்கள் சில காணப்பட்டதே அரசருடைய ஆத்திரத்துக்கு காரணமாகும்.

அரசர்: பூசாரியாரே! பாலகிருஷ்ணன் கிழவனாகி விட்டானா? அவனுடைய தலையிலே சூடப்பட்ட பூமாலையிலே நரைமயிர்கள் காணப்படுகின்றனவே ......

அர்ச்சகர்:- பிரபு! கண்ணனுக்கு சூடப்பட்ட மாலைதான் இது......

மாலையில் உள்ள மயிர் வெள்ளையாகத்தான் இருக்கிறது......

அரசர்: சரி, நாளை காலை இங்கு நான் வந்து பாலகிருஷ்ணனின் தலையில் நரைமுடி இருக்கிறதா என்று பார்த்து விடுகிறேன். கண்ணன் தலையில் நரைமுடி இல்லாவிட்டால் உங்களுக்கு தண்டனை கிடைக்கும்......

இப்படிக் கூறிவிட்டு அரசர் சென்றுவிட்டார். அர்ச்சகரைப் பயம் பற்றிக்கொண்டது. வீட்டுக்குச் செல்லாது பாலகிருஷ்ணன் சிலையின் முன்பு விக்கி விக்கி அழுதபடி கிடந்தார்.

அர்ச்சகர்: கண்ணா! மணிவண்ணா! ஆபத்பாந்தவா! என்னை நீதான் காப்பாற்ற வேண்டும். நீ என்னை எப்படியாவது காப்பாற்றுவாய் என்று மனதார நம்புகிறேன். பக்தர் குறை போக்கும் பரந்தாமா! இந்தப் பாவியைக் காப்பாற்று ......

— இப்படிப் புலம்பியபடி தன்னையும் அறியாது தூங்கி விட்டார் அர்ச்சகர். அடுத்த நாள் அரசர் வந்து எழுப்பிய பின்புதான் அவர் எழுந்தார்.

அரசர் மெதுவாக திரையை விலக்கி பாலகிருஷ்ணன் சிலையைப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! பாலகிருஷ்ணனின் தலைமயிர்கள் வெள்ளையாக — நரைமுடியாகக் காட்சி அளித்தன.

அர்ச்சகர் ஏதோ மோசம் செய்திருக்கிறார் போலிருக்கிறது என்று எண்ணிய அரசர் பாலகிருஷ்ணன் சிலையில் காணப்பட்ட வெள்ளை மயிர்களில் சிலவற்றைப் பிடித்து இழுத்தார்.

மயிர் பிடுங்கப்பட்ட இடங்களிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும், "ஐயோ! கண்ணா என்னை மன்னித்து விடு" என்று கதறிய அரசர், அர்ச்சகரிடமும் மன்னிப்புக் கோரிக்கொண்டார்.

— மாஸ்டர் சிவலிங்கம்

## சமயத்தின் சக்தி!

பாரத நாட்டில் மக்களிடையே இனவேறுபாடு இருக்கலாம். மொழிவேறுபாடு இருக்கலாம். சமூகத் தொல்லைகள் இருக்கலாம். தேசியத் தொந்தரவுகள் இருக்கலாம். ஆனால் அவை சமயத்தின் ஒன்றுபடுத்தும் சக்திக்கு முன்னால் மறைந்து விடுகின்றன. சமய இலட்சியங்களைவிட பாரத மக்களுக்கு உயர்வானது வேறு எதுவுமில்லை. பாரதிய வாழ்க்கையின் ஆதார சுருதியாக சமயம் அமைந்துள்ளது.

சமயமாகிற இலட்சியம் தான் மிக உன்னத இலட்சியம், வருங்காலத்தை நிர்மாணிக்க முதலில் தேவைப்படுவது சமய ஒற்றுமைதான்.

- சுவாமி விவேகானந்தர்

## ஜபம் செய்யுங்கள்!

"இறைவா! நான் உன்னுடையவன். எல்லாம் உன் விருப்பப்படியே நடக்கும். நீயே அனைத்துமாக இருக்கின்றாய். நீயே அனைத்தையும் செய்கின்றாய். இதனை மனப்பூர்வமாக பாவனையுடன் தினசரி ஜபம் செய்யுங்கள். 'யாவும் நீயே; நான் தாஸன், ஸ்ரீ எஜமான்' என்னும் பக்தி நிலை எப்பொழுது பக்குவமாகிறதோ, அப்பொழுதுதான் கடவுளை அடைய முடியும்."

## உவந்தது எது?

திருமாலுக்கு உவந்தது துளசி. சிவனுக்கு உவந்தது வில்வம்.

சிவம் - சூடு
விஷ்ணு - குளிர்ச்சி
சிவம் - அனல்
விஷ்ணு - நீர்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றம்

## 1988 ஆண்டு நிருவாகிகள்

பாதுகாவலர்கள்: சுவாமி பிரேமாத்மா நந்தஜி (இராமகிருஷ்ண மிஷன்) மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் (கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்) மாண்புமிகு அமைச்சர் சி. இராசதுரை (பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சர்) மாண்புமிகு அமைச்சர் அநுரா பஸ்டியான் (பாதுகாப்பு பிரதி அமைச்சர்) திரு. ஆர். வைத்திமா நிதி (ஜி. எம். ஜபர்ஜி)

தலைவர்:
திரு. ந. யோகசுந்தரம்,

உபதலைவர்கள்: திரு. கே. சின்னையா, திரு. ஆர். பாலன்.

பொதுச் செயலாளர்:
திரு. கனகசபாபதி,

பொருளாளர்:
திரு. எம்.சதாசிவம்,

செயற்குழு உறுப்பினர்கள்:
திரு. அ. மு. துரைசாமி திரு. இசக்கிமுத்து, செல்வி இராணி இசக்கிமுத்து, திருமதி பி. கே. சண்முகம், திருமதி சரஸ்வதி பாலன், செல்வி திலகவதி சதாசிவம், திரு. இ. இரங்கநாதன், திரு. வி. இராசதுரை, திரு.எஸ்,பி. அரவிந்தன்,

## வழிபாடு

நறுமணப் பொருட்கள், மலர்கள், வாசனைப் புகை. தீபங்கள், பழங்கள் ஆகியவற்றை அர்ப்பணித்தலே மரபு வழி அமைந்த பூசையின் ஐந்து அம்சங்கள் தீபாராதனையோடு பூசை நிறைவு பெறுகிறது.

—காமிகாகமம்

கடவுளிடம் நமக்குள்ள ஆழ்ந்த பக்தியை வெளிப்படுத்தலே வழிபாடு பூசை, பஜனை, பிரார்த்தனை, தியானம் என்னும் இவை அனைத்தும் கடவுளுடனும் நேரடியான இணைப்பை அமைக்கும் வழிபாட்டு முறைகளாகும், கடவுள், தெய்வங்கள், தேவர்கள் ஆகியோர் அக உலகங்களில் உண்மையாகவே வசிக்கிறார்கள். உங்கள் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் உங்களுக்கு அவர்கள் உதவ முடியும், உதவ விரும்புகிறார்கள், உங்களது கன்மவினை, அறஒழுக்கம் முதலியவைகளுக்கமைய அவர்கள் இதனைச்செய்கிறார்கள். நாள் தோறும் வீட்டில் நீங்கள் செய்யும் பூசை உங்களைக் கடவுள் உணர்வு உடையவர்களாகவும் உங்கள் இல்லத்தைப் புனிதமானதாகவும் ஆக்குகிறது. கடவுளுடன் நாம் நெருங்கி உறவாடப் பல திருக்கோயில்களை நிறுவியுள்ளார்கள். கோவில் பூசை கடவுளை அடைய ஒரு வழியைத் திறக்கிறது. அவரது திருவுருவக் காட்சியினாலும் பூரண சக்தியினாலும் பிரார்த்தனைகளுக்கு விடைகிடைக்கின்றன; கன்மவினை மென்மையடைகிறது. ஆன்மிக வளர்ச்சிக்கு வழி பிறக்கிறது. ஆகவே கடவுளிடம் சரணடையுங்கள்! ஆழ்ந்த பக்தியுடன் வழிபடுங்கள்! அவர் செவிசாய்க்கிறார்.

கன்மம், மறுபிறவி, அறம், வழிபாடு என்னும் இந் நான்கு உண்மைகளும் வேறு ஆகமங்களின் சாரமாகும் இவையே ஒவ்வொரு இந்துவின் வாழ்விற்கும் உரிய கட்டமைப்பு கேட்கக்கூடிய அனைவர்க்கும் இவற்றைப் பற்றிக் கூறுங்கள். இப்புவியில் அனைத்து ஆன்மாக்களின் பாரம்பரியமும் இவைதான்.

**சைவாலய—**

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் சைவம் ஒருபுறம் அவமதிக்கப்படுகிறதெனில் தவறே அல்ல.

இனி, ஆசீர்வாதத்துக்குப் பின் திருமுறை ஓதவிட்டு, அவ்வேளையில் பூஜகர் வேறு பராக்காயிருக்கக் காணும் உபத்திரவமும் வேறு. அந்நிலைமையே திருமுறை பூஜையிற் சேர்க்கை பெறாது புறம்போக்காய் விடப்பட்டமையைத் துலாம்பரமாகக் காட்டுவதாகும் திருமுறை பாடப்படும்போது பூஜகர் அர்ச்சனைக் குறை நிறைவேற்றுதல் வேறுவகையில் ஆசுவாசம் பண்ணிக்கொள்ளுதல் கூடப் பெரும்பான்மை திருமுறை மந்திர ஒலிக்கு எதிரிடையாக அர்ச்சனை மந்திர ஒலியைக் கிளப்புதல். 'அவர் ஏதோ சொல்கிறார். அதைவிட்டு இதைக்கேளும் என்று சுவாமியின் கவனத்தைத் திசை திருப்பும் தந்திரமோ என்றும் ஐயுறுதற்கு இடமாகின்றது. அன்றியும், பூஜை அரங்கில் திருமுறைக்கு தனித்துவமான இடமில்லை என்பதாக வழிபடுவோரிடத்தில் தவறான ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் வல்லதாகின்றது. இந்நிலை நீடிக்க விடப்படுதல் தகுமோ? சிந்திமின்;

ஆகம அநுசரணையிலுள்ள தமிழ் நாட்டுக் கோயில்களில் தோத்திர பூஜையில் வேதமும் திருமுறையும் இடையீடின்றி இடம்பெறுகின்றன. வேலணைக்கு அப்பாலுள்ள வட இலங்கைக் கோயில்களிலும் அங்ஙனமே. திருக்கேதீஸ்வரம், கன்னாகம் கதிரைமலைச் சிவன்கோயில், ஐயனார் கோயில்களிலும் அங்ஙனமே. இருந்தும் குடாநாட்டிலும் இலங்கையின் மறுபகுதிகளிலும் பரவலாக இதற்குப் புறக்கணிப்பு நிகழ்கிறது சொல்லியும் கேட்காமல் தவறாகப் பண்ணும் புறக்கணிப்பு நிலை காழ்ப்புற்றிருத்தலும் கண்கூடு.

இந்நிலையில் திருத்தம் நேரும் வாய்ப்பு இரு விதங்களில் கைகூடுதல் கூடும். ஆலய நிர்வாகமும் பூஜை உபயகாரரும் பூஜகரிடம் உண்மையை விளக்கிச் சரியான நிலை நடைமுறைக்கு வரச் செய்தல் ஒருவிதம். இது சுமுக வழியான நடவடிக்கையாம். மற்றையது ஆசீர்வாதத்துக்குப் பின் திருமுறை ஓதவிடப்படுமிடத்து ஒருவரும் திருமுறை ஓத முன்வராதிருத்தல். இது எதிர் நடவடிக்கையாயினும் ஒரு சில நாட்களில் சரியான நிலையை வருவிக்கக் கூடியது. அன்றியும் திருமுறையின் உயர் மகிமையை ஆலய வளாகத்தில் ஸ்தாபிக்கக் கூடியதுமாம்.

எந்த வகையாலேயோ சிவநெறி ஆலய நெறிகளைப் போலப் பூஜை நெறியையும் சரி நிலையில் ஆக்கிவைப்பது சிவபுண்ணியம். பிழையானது நடக்கப் பார்த்திருப்பதே சிவ அபராதம். சிவ அபராதம் வளர்ச்சிக்கல்ல. சிவபுண்ணிய விருத்திக்கே உரியது கோயில். இது நாவலர் வழி வழி உணர்வில் சைவமக்கள் அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும்.

"திருவருள்" நன்றி

அன்பே சிவம்

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாகும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாகும் அறிந்தான்
அன்பே சிவமாய் அமர்ந் தாரே!

இந்து கலாசாரமே!

வருக வருக வென உன்னை
வாழ்த்தி வரவேற்கிறோம்!

நலம்விரும்பி

ஆவணி...

(6ம் பக்கத் தொடர்)

தர்சித்தபின் விரதங்களை நிறைவு செய்வர்.

ஆவணி 25 1988-09-10
ஞாயிற்றுக்கிழமை

**அமைவாசை விரதம்** தகப்பனை இழந்தவர்கள் பிதுர் தர்ப்பணஞ்செய்துவிரதத்தை நிறைவேற்றுவர்.

ஆவணி 28 1988-09-13
செவ்வாய்க்கிழமை

**யாம வேத உபாகர்மம்** யாம வேதிகள் விரதானுஷ்டானங்களுடன் ஜபம், தர்ப்பணம் பூணூல் மாற்றல், ஹோமம் என்பன செய்வர்.

ஆவணி -30 1988-09-15
வியாழக்கிழமை.

**விநாயகர் சதுர்த்தி விரதம்**

வினைகளைப் போக்கும் விக்கினேஸ்வரப் பெருமானின் தினம். எல்லா ஆலயங்களிலும் விநாயகருக்கு அபிஷேகம், பூஜை, உற்சவம் என்பன நடைபெறும் கோவில் தர்சனத்துக்குப் பின் விரதக்காரர்கள் தமது விரதங்களை நிறைவேற்றுவர்.

### ஆவணி ஞாயிறு

இது சூரிய வழிபாட்டுத் தினம். எல்லா இல்லங்களிலும் சூரியனுக்குப் பொங்கல் பொங்கி வழிபாடுகள் செய்த பின் விரதங்களை எல்லோரும் நிறைவு செய்வர்.

ஆவணி - 05 - 1988 - 08 - 21

ஆவணி - 12 - 1988 - 08 - 28

ஆவணி - 19 - 1988 - 09 - 04

ஆவணி - 26 - 1988 - 09 - 11

# நம் முன்னோர் விட்டுச் சென்ற அரும் பெரும் செல்வங்கள்

## பேணிப் பாதுகாப்பது நம் தலையாய கடமை

எங்கள் சமயம் சைவசமயம். எங்கள் இறைவன் சிவபெருமான். சிவபெருமான் உலகத்துக்குக் கருத்தா. அவரே முழுமுதற் கடவுள். அவர் பரமபிதா. அவர் மற்றத்தெய்வ மூர்த்தங்களில் அதிட்டித்து நின்று அருள்புரிபவர். நாங்கள் சிவாலயத்திலாயினும், அம்மன் கோயிலிலாயினும், விஷ்ணு ஆலயத்திலாயினும், பிள்ளையார் கோயிலிலாயினும், முருகனுலயத்திலாயினும், வைரவர் கோயிலிலாயினும் வழிபடலாம். அங்கெல்லாம் நீக்கமற நின்றருள்புரிபவர் ஒரே கடவுள் தான்.

கடவுள் ஒருவரே. அவர் அருள்புரியும்வகை பலவாகும். அவற்றைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்தலாகாது. நாம் கடவுளை நம்பி, அவரை வழிபட்டு வரம் பெறுதலே நமது கடமை. ''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் அருமைத் திருவாக்கு.

### சைவத்தின் பழமை

எங்கள் சமயம் பழமையானது, புனிதமானது, சனுதனமானது, வியாபகமானது, அன்பை அடிப்படையாகக் கொண்டது. எங்கள் சமயத்தில் நின்று முனிவர்கள், நாயன்மார்கள், தொண்டர்கள், சித்தர்கள், முடி மன்னர்கள், ஆதீனகர்த்தர்கள், தம்பிரான்கள், தவசிப்பிள்ளைகள், சமயாசாரிகள், மாதரசிகள் உய்திபெற்றுள்ளார்கள்.

உய்திபெற்ற உத்தமர்கள் எமக்கு வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அவர்கள் விட்டுச் சென்ற அருஞ் செல்வங்களை நாம் பேணிப் பாதுகாத்தல் நம் தலையாய கடமையாகும்.

### எம்முன்னோர் அளித்த அருஞ் செல்வங்கள்

வையகத்தில் வாழும் வகை தெரிந்து வாழ்ந்த எம் முன்னோர்கள், எமக்காகத் தங்கள் இறை அனுபவத்தையும் வாழ்க்கை அனுபவத்தையும் பெரு நூல்களில் பெய்து தந்துள்ளார்கள். நாம்வாழும் வாழ்க்கையில் வாழ்வதற்காக வழிவகுத்துப் பாதை அமைத்துள்ளார்கள். உய்வைத்தர எமக்கு வழிகாட்டிய உத்தமர் வழியை நாம் பின் தொடர்வோமாக.

எம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற கலைஞானங்கள் தமிழிலும் வடமொழியிலும் உள்ளன. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பிரபந்தங்கள், திருதொண்டர் புராணம், திருக்குறள், சைவசித்தாந்த சாத்திரங்கள், பண்டார சாத்திரங்கள், திருப்புகழ் முதலியனவும், இன்னும் பழமையான வேதங்கள், உபவேதங்கள், ஆகமங்கள், தர்ம சாஸ்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள் முதலியனவும் எமது சனுதன சைவக் களஞ்சியங்களாகும்.

— நன்றி: இந்து சமய மன்றம்

## மில்க்வைற் அதிபருக்கு 60 வயது!

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக அதிபர் சிவநெறிப் புரவலர் க. கனகராஜா சமாதான நீதிவான் அவர்களுக்கு அறுபது வயது பிறந்திருக்கின்றது.

அப்பெரியாரை இந்து கலாசாரம் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றது.


### இந்துகலாசாரம்

( திங்கள் இதழ் )

சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூபா 50.00 |
| ஆறுமாதம் | ரூபா 30.00 |
| மூன்று மாதம் | ரூபா 15.00 |
| தனிப் பிரதி | ரூபா 5.00 |

விபரங்களுக்கு :
நிருவாகி
இந்துகலாசாரம்
39/23 நெல்சன் ஒழுங்கை
கொழும்பு - 3

PRIVATE CIRCULATION
FRIENDS ONLY


## இந்து கலாசார — - -

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலையிலுள்ள ஒரு பெரிய வகுப்பறையை நாம் பராமரித்து வந்துள்ளோம். ஆண்டு தோறும் "எமல்ஷன் பெயின்ட்" கொண்டு நிந்தை பூசி அழகுபடுத்துவோம். பெற்றோர் தினவிழாவில் முக்கிய பங்கெடுத்து பெரும் உதவி செய்துள்ளோம். எமது மன்ற உறுப்பினர்கள் பலர் தாராளமாக உதவியுள்ளனர்.

பாடசாலையின் சரித்திரத்திலேயே முதன்முறையாக ஒரு இல்ல விளையாட்டுப் போட்டியை இந்து கலாசார மன்றம் ஒழுங்கு செய்து கொடுத்தது. இப்பகுதியில் நாம் பிரசுரித்துள்ள விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு வழங்கிய நற்சாட்சி பத்திரத்தின் பிரதியையும் விளையாட்டுப் போட்டியை பெரிதும் பாராட்டிப் பேசிய வட்டாரக் கல்வி அதிகாரியின் பேச்சையும் படங்களில் காணலாம்.

(மிகுதி அடுத்த இதழில்)


C/Kollupitiya Methodist Govt. Tamil Mixed School
NO. 59, HUDSON'S ROAD, COLOMBO 3. (Sri Lanka)

கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நாம் நடத்தி வந்த சைவ சமய தமிழ் வகுப்புகளை பாடசாலை அதிபர் பாராட்டி எழுதிய கடிதம்

# வெற்றிதோல்வியை சந்திக்கும் மனப்பக்குவம் தேவை

## கல்வியதிகாரி சர்மா அறிவுரை

(கேசரி நிருபர்)

மாணவர்கள் தமது பாடசாலை காலத்தில் புத்தகப்படிப்புடன் நின்று விடாது உடல் வளர்ச்சிக்கு ஊக்க மூட்டும் விளையாட்டுகளிலும் ஈடுபட வேண்டும். அதன் மூலமே வாழ்வில் வெற்றிதோல்வியை சந்திக்கும் தன்மையும் சகோதரத்துவத்தையும், பொறுப்புணர்ச்சியும்பெற்றுக்கொள்ளவும் முடியும் என கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய கொழும்பு தெற்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆர். சண்முகசர்மா குறிப்பிட்டார்.

கொள்ளுப்பிட்டி இந்து கலாசாரமன்றத்தின் ஆதரவில் மேற்படி கல்லூரி முதன் முதலில் தனது வருடாந்த விளையாட்டுபோட்டியை கொள்ளுப்பிட்டி பிஷப் கல்லூரி மைதானத்தில் இல்ல விளையாட்டு போட்டியை நடத்தியது.

அங்கு வட்டார கல்வி அதிகாரி திரு. ஆர் சண்முக சர்மா தொடர்ந்து உரையாற்றுகையில், இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு பலவருடங்களாகியும் இது வரை விளையாட்டுப் போட்டி நடத்தப்படாமல் இருந்து முதன் முறையாக இல்ல விளையாட்டு போட்டி நடத்தப்படுவது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன். அத்துடன் இந்த போட்டி வருடா வருடம் நடைபெற வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன் என்றார்.

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் திரு.ஜே.ஸ்டான்லி ஜன்ஸ், கொள்ளுப்பிட்டி இந்துகலாசார மன்றத் தலைவர் திரு.ஏ. எம். துரைசாமி உட்படபலர் உரையாற்றினார்கள்.

போட்டியில் வெற்றியீட்டிய மாணவ மாணவிகளுக்கு கொள்ளுப்பிட்டி மெதடிஸ் கல்லூரி அதிபர் திருமதி பீரிஸ் பரிசில்களை வழங்கினார்.

நன்றி : வீரகேசரி.

கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது வருடங்களாகியும் முதன்முறையாக இல்ல விளையாட்டுப் போட்டியை இந்து கலாசார மன்றமே ஒழுங்கு செய்து கொடுத்தது. அவ்விளையாட்டுப் போட்டியில் கொழும்பு தெற்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆர். சண்முக சர்மா பேசிய பேச்சை மேலே காண்க.

''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்று திருநாவுக்கரசு நாயனர் தமது எண்பத்தொரு ஆண்டு அனுபவத்தைப் பாடியருளியுள்ளார். எங்கள் சமயம் எல்லாச் சமயங்களுக்கும் தாய் போன்றது. எங்கள் சமயம் மேலும் செழித்தோங்குதல் வேண்டும் நாம் எல்லோரும் நல்ல சிந்தனை, நல்ல குணம், நல்ல செயல் உள்ளவராய் வாழுதல் வேண்டும். நல்லொழுக்கம், கடவுட் பற்று, நாட்டுப் பற்று, தமிழ்ப் பற்று உள்ளவராதல் வேண்டும்.

— நன்றி: இந்து சமய மன்றம்

உ

ஓம் ஜெய் சாயிராம்

"மனிதன் இடைவிடாது இன்பத்தை தேடுகிறான். இன்பம் அனுபவிப்பதற்காக எதையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறான். ஆனால் உண்மையான இன்பம் எங்கே கிடைக்கிறது. இன்பம் மனிதனிடத்தே இயல்பாய் உள்ளது. இந்த உண்மையை உணராமல் அறியாமையினால் அவன் புறப் பொருள்களில் அதைத் தேடுகிறான்."

— பகவான் சத்திய சாயிபாபா

இந்து கலாசாரத்துக்கு

எமது நல்வாழ்த்துக்கள்

## ஸ்ரீ சத்ய சாயிபாபா பஜன் மண்டலி

கொள்ளுப்பிட்டி.

உ

வருக! வருக!!

இந்து கலாசார உலகில்

தனிப் பொலிவு பெற்று விளங்க

# இந்து கலாசாரத்தை

## வாழ்த்தி வரவேற்கிறோம்

நலம்விரும்பிகள் :
திருவாளர்கள் : செ. பழனிச்சாமி
: சோ. கணேசராஜா
கொழும்பு.

# ஸ்ரீ சக்கர பூஜையின் மகிமை

இந்து தர்மத்தில் இயந்திர வழிபாடு ஒரு முக்கிய அம்சமாகும். இந்த இயந்திர வழிபாடுகள் இன்று வரை மேல் நாட்டவருக்கு மட்டுமன்றி இந்துக்களுக்கும் புரியாத புதிராகவே இருந்து வந்திருக்கிறது.

இயந்திரங்களில் கண்ணுக்குப் புலப்படாத புத்திக்கு அகப்படாத தெய்வீகசக்திகள் வரி வடிவம்('ஜியோமித்')மந்திர ஒலிகளின் அலை வடிவாக கை பதிவதனால் இயந்திரங்கள் உயிர்ப்புடையன என நம்பப்படுகிறது.

மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியானது இந்த இயந்திர சக்தியால் தூண்டப்பட்டு மனம், வாக்கு, காயம், ஆன்மீகம் ஆகிய அனைத்து உணர்வுகளாலும் மனிதன் தூண்டலடைகிறான். அதற்கு இந்த வரிவடிவங்கள் வழி வகுக்கின்றன. வரி வடிவ சாஸ்திரம் மட்டுமன்றி கணிதம், விஞ்ஞானம், ஒலி அலை, பௌதிகம் ஆகிய அனைத்தையும் கொண்டு அமைந்ததே இயந்திர சாஸ்திரம்.

அப்படிப்பட்ட இயந்திர சாஸ்திரத்தில் மிக முக்கியமானது ஸ்ரீ சக்கர வழிபாடாகும். மகாமேரு யந்திரம் எனப்படும் ஸ்ரீ சக்கர பீடமே அம்பிகையின் இருப்பிடமாகும். வேறு எந்த விதமான விளக்கமுமின்றி சக்ரம் என்று சொன்னாலே ஸ்ரீ சக்கரம் என்பதை உணர்த்தும் வகையில் சிறப்புற்றது இச்சக்கரம்.

ஏனைய இயந்திரங்களைப் போலல்லாது மந்திர எழுத்துக்கள் எதுவும் பொறிக்கப்படாமலேயே ஸ்ரீ சக்கரம் பலனளிக்க வல்லது.

கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஸ்ரீ சக்ர வழிபாடு நின்று நிலைத்திருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நவீன காலத்திய விஞ்ஞான, அணுவின் கருத்துக்களுக்கு முற்றிலும் ஒத்த அடிப்படைகளை ஸ்ரீ சக்கரமும் கொண்டுள்ளது என அறியப்பட்டுள்ளது. ஆனாலும் இதனைப் பற்றி ஆய்வுகளை மேற்கொள்வது அறிஞர்களுக்கெல்லாம் பெரும் சவாலாகவே உள்ளது.

ஒன்பது முக்கோணங்கள் வெட்டிக்கொள்வதனால் நாற்பத்து மூன்று முக்கோணங்கள் உருவாகின்றன. இந்த ஒன்பது முக்கோணங்களில் சிவ முக்கோணங்கள் நான்கும், சக்தி முக்கோணங்கள் ஐந்தும் அடங்குவன. இதன் நடுவில் அமையும் பிந்து மண்டலத்தில் அன்னை அமர்கிறாள். அன்னை அமரும் உயரிய பேறு பெற்ற காரணத்தினால் இது 'சக்ர ராஜம்' சக்ரங்களின் மன்னன் எனப் பெயருடையது.

ஒன்பது முக்கோணங்களில் கீழ் நோக்கிய முக்கோணங்கள் ஐந்தும் சக்தி கோணங்களெனவும், மேல் நோக்கியவை சிவ கோணங்களெனவும் வழங்கப்படுகின்றன. இவை இணைவதனால் சிவ சக்தி சம்பந்தமாக நிற்கின்றன.

பூப்பிரஸ்தரம், கைலாச ப்ரஸ்தரம், மேரு ப்ரஸ்தரம் என்று மூவகையானது ஸ்ரீ சக்கரம். அதாவது தகடுரு. சிறிது மேடான, நல்ல உயரமானதாகும். ஸ்ரீ சக்கரத்தின் தேவதை ஸ்ரீ லலிதாம்பிகையாகும்.

வெளியில் இருக்கும் சக்கரம் பூபுரச் சக்கரம் ஆகும். அதனுள் இருப்பது சர்வசா பரிபூரக சக்கரம் இருக்கிறது. அவையடுத்து சர்வ சங்ஷேபன சக்கரமும், அதற்குள் சர்வ சௌபாக்கிய தாயக சக்கரமும், அதற்குள் சர்வார்த்த சாதக சக்கரமும், அதனுள் சர்வரசாகர சக்கரமும், அதற்குள் சர்வ ரோகஹரசக்கரமும்,சர்வசித்திரபிதசக்ரமும் அதனுள்ளே நடுவில் அமைந்த பிந்து சக்கரத்தை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன. இந்த ஒன்பது சக்கரங்களில் பூபுரச் சக்கரம் பூமியையும், நமது சரீரத்தையும் குறிப்பதாகும். இரண்டாவது சக்கரமானது பதினாறு இதழ்களை உடையது. மூன்றாவது சக்கரம் எட்டு இதழ்களையும், ஐந்தாவது சக்கரம் பத்து முக்கோணங்களையும், ஆறாவது சக்கரம் பத்து முக்கோணங்களையும், ஏழாவது சக்கரம் எட்டு முக்கோணங்களையும் உடையதாகவும் காட்டப்படுகிறது. எட்டாவது சக்கரமானது மூன்று கோணங்களையுடைய ஒரே சக்கரமானது. ஒன்பதாவது சக்கரமான பிந்து ஸ்தானம் ஸ்ரீ லலிதாம்பிகை உறையும் பிரம்மஸ்தானமாக ஒரே விட்டமாக உள்ளது.

தவிர தோல், இரத்தம், ஊன், கொழுப்பு, என்பு ஆகிய ஐந்தும் சக்தி கோணங்களாகவும், என்புள்ளே இருக்கும் மச்சை, அக்கிலம், பிராணன், ஜீவன் ஆகிய நான்கும் சிவகோணங்களாகவும் கூறப்படுகின்றன. இவ்வொன்பது தாதுக்களின் அமைப்பான நம் உடம்பே சக்கிரமாகவும், அதனுள் மைய அமைப்பான நம் இதயமே பிந்து ஸ்தானமாகவும் கொண்டே ஸ்ரீ சக்ர ராஜசிம்மாசனத்தில் உறையும் ஸ்ரீ லலிதாம்பிகையை பூஜிக்க வேண்டும் என்பதே இதன் உட்கருத்தாகும். இதையே பவனோபரிசரத்தும் கூறுகிறது. இதைப் பின்பற்றியே ஸ்ரீ இராமகிருஷ்ண பரஹம்சர், அபிராமிபட்டரும் திருமூலமும் தம் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். காயமே கோயிலாக கொண்ட இவர்கள் சிவசக்தி எழுந்தருளும் நவகோணமாகவே தம் சரீரத்தை கருதி வந்தனர்.

பண்டாசுரன் என்ற அசுரனை அழிக்கத் தலைப்பட்டாள் அன்னை. ஒன்பது முக்கோணங்களைக் கொண்ட தேரின் மீதேறி வந்தாள். அச்சக்ரத்தில் உறைந்த காரணத்தினாலேயே ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்தில் பல இடங்களில் சக்ர ராஜ சிம்மாசின்' என போற்றப்படுகிறாள்.

இதன் உட்கருத்தானது துர்க்குணங்களாகிய பண்டாசுரனை அழிக்க நவதாதுக்களாலான நமது சரீரத்தில்ஆரோகணித்து அருளுவாள் என்பதாகும். இந்தத் தத்துவத்தில் உலகமனைத்தையும் உய்விக்கும் முகமாக ஸ்ரீ சக்ரத்தில் உறையும் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியை பூஜித்த பலன் ஸ்ரீ சக்ரத்தை பூஜிப்பதால் கிட்டும்.

( சந்திரிகா சோமசுந்தரம் )

# தமிழ் இளைஞர் கலாசார கூட்டமைப்பின் சிறந்தபணி

## பொதுவாழ்வில் 25 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய ஐவருக்குப் பாராட்டு விழா

[திரு. பி. வெள்ளையப்பன் அவர்கள்]

**த**மிழ் இளைஞர் கலாசார கூட்டமைப்பு கடந்த மாதம் 24.7.88 இல் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் பொது வாழ்வில் கால் நூற்றுண்டுகளுக்குமேல் பொதுச் சேவைசெய்த பெருமைக்குரியவர்களுக்கு பெரும் விழா நடத்தி பொன்னுடை போர்த்திகௌரவித்தார்கள். இந்த விழாவினில் பிரதம அதிதியாக மாண்புமிகு இந்து கலாசார தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சர் செல்லையா இராசதுரை கலந்து கொண்டார்.

தமிழ் இளைஞர் நடத்திய இவ்விழாவை பாராட்டிப் பேசிய அமைச்சர், தமிழின் பெருமையை தமிழின் சிறப்பை, தமிழின் இனிமையை அறிந்துகொள்ளும் ஆவலுடன் மேலை நாட்டவர்கள் கூட தமிழை கற்று தமிழின் சுவைக்கு உந்தப்பட்டார்கள் என்பதை தெள்ளத் தெளிவாக எடுத்துக்கூறினுர்.

அன்றைய நிகழ்ச்சியில் ''கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும் அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே நீட்டோலை வாசியா நின்றன் குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்.'' கல்வியில்லா ஒருவன் காட்டில் வளரும் மரங்களை விடவும் கீழானவன் என்பதை இச் செய்யுளின் மூலமாக எமக்கு எடுத்தியம்புகிறுர் ஔவைப் பிராட்டி.

உயிருக்கு உடலும், உடலுக்கு உயிரும் பயன்படுவதைப்போல் எழுத்தறிவித்தவன் இறைவனுவான் என்பதை மனதில்கொண்டு பள்ளிச் சிறுர்களுக்கு கல்விச் செல்வத்தை அள்ளித்தந்து அருஞ்சேவை செய்த விவேகானந்த வித்தியாலய ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி, பி. சுப்ரமணியம் அவர்களுக்கும், மல்லிகை கொடி மணப்பதில்லை அதிலிருந்து பூக்கும் மலர்களில்தான் மணம் தங்கியிருக்கின்றது அதுபோல் தான் கற்ற கல்வியின் உதவி கொண்டு மண் வாசனையுடன் இலக்கியம் படைத்த எழுத்தாளர் (தெளிவத்தை) திரு. ஜோசப் அவர்களுக்கும், கூத்



தாடுவது குன்றி அசைவதும் ஆடுவதும் ஆத்தாதவன் செய்யும் தொழில் என்று கூறிய காலகட்டத்தில் ஆடல் கலை, பாடல் கலை, சிற்பக் கலை, சித்திரக்கலை இன்னும் பல கலைகளை எமது கண் முன்னே உயிரூட்டி நிறுத்துபவனே கலைஞன். இந்த வகையில் தான் பெற்ற கலைக்கு உயிரூட்டி இரசிகர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்ற நடிகை திருமதி ஹெலன் குமாரி ராஜசேகரன் அவர்களுக்கும், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என கருதும் விவேகானந்த சபை கல்வித் துறையிலும் சமயத்துறையிலும் பின் தங்கியுள்ள எமது இளம் சந்ததியினருக்கு உதவும் முகமாக அரும் சேவைகளை செய்து தன்நலம் கருதாது பிறர் நலமே தன் நலம் என கருதி செயற்பட்டு வரும் விவேகானந்த சபை பொதுச் செயலாளர் திரு. இராஜ புவனீஸ்வரன் ஜே.பி. அவர்களுக்கும்.

இலங்கையிலேயே முதன் முதலாக பள்ளிச்சிறுர்களுக்கு பகல் உணவு வழங்கும் முயற்சியை ஆரம்பித்து வைத்தவரும் மெழுகுவர்த்தி போன்று தன்னை உருக்கி பிறருக்கு வெளிச்சத்தை கொடுத்தது போல் பிறருக்கு என வாழுகின்ற கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்க பொதுச் செயலாளர் திரு க. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் பொன்னுடை போர்த்தி கௌரவித்த தமிழ் இளைஞர் கலாசார கூட்டமைப்பை பாராட்டாமல் இருக்கமுடியாது.

ஆல மரம்போல் விழுதிறங்கி அனைவரும் தங்கி நிற்க நிழலாகி மென்மேலும் பற்பல வைகளை எமதுசமுதாயத்திற்குசெய்யவேண்டும். இளைஞர் கலாசார கூட்டணியின்பணிகொழும்புநகரத்தில் மட்டுமல்லாது நாடளாவிய பணியாக மாறவேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### பாலவிகாஷ்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நூற்றுண்டுக்காலமாக பாரதம் வேதம், புராணங்கள், உபநிஷத்துக்கள் இன்னும் எத்தனையோ ஆன்ம போதனைகளையும் பொக்கிஷமாக போற்றிவந்துள்ளது. மனித சமுதாயத்தோடு பேரானந்தத்தை பகிர்ந்துள்ளது. அதனை இன்றைய மாணவர் பின்பற்றுவதாக சத்தியம் செய்ய வேண்டும். அவற்றுல் கிடைக்கக்கூடிய பேரானந்தத்தைப் பெறவேண்டும்.

இளம் வயதில் பெறக்கூடிய கல்வியே சிறந்தது. அதன் உன்னத இலட்சியங்களே ஒருவனைப் பிற்காலத்தில் தேசபக்தனுகவோ, அல்லது வேறு வழிகளில் மாறச் செய்கின்றது. இளம் பிராயத்தில் நல்லொழுக்கம், நல்ல குணங்கள் பயிற்றப்படாத யூதாஸ் என்பவன் கிறீஸ்துநாதரைக் காட்டிக்கொடுத்தான். அத்தகைய மகானுக்குத் துரோகம் செய்தான். ஆதலின் இளமையில் பெறும் கல்வி முக்கியமானது. இதனை அடிப்படையாகக்கொண்டே பகவான் பாபா அவர்கள் மிக நுணுக்கமாக ஆராய்ந்து மாணவர் பாடத்திட்டத்தை வகுத்திருக்கிறுர்கள். இத்தகைய கல்வி முறை உலகம் பூராவும் பரவி, மனித சமுதாயத்திற்குப் பெருநன்மை ஏற்படவேண்டும். அரசியல்வாதிகள், கலவிமான்கள் பார்த்து அதிசயிக்கக்கூடிய வகையில் இக்கல்விமுறையில் பயிலும் மாணவ மாணவிகள் முன்னேறி வருகின்றுர்கள். சனுதன தர்மம் வளர, பஞ்சசிலங்களின் அடிப்படையில் இத்தகைய கல்விமுறை இன்றைய மாணவ சமுதாயத்திற்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

*With Best Compliments From*

# MEDICONE PHARMACEUTICALS

**Importers and Distributors of Pharmaceuticals**

★ CAREER DEVELOPMENT AND

MANAGEMENT SERVICES

**"With our guidance, equip yourself for**

**a career in Salesmanship"**

No 19/A C. PAGODA ROAD, NUGEGODA

**Telephone 552023.**

இப்பத்திரிகை கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி நெல்சன் ஒழுங்கை 39/23 ல்லத்தில் வசிக்கும் அ. மு. துரைசாமி என்பவரால் கொழும்பு-12. டாம் வீதி 201, இலக்கத்திலுள்ள குமரன் அச்ச தில் 15-8-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.